உ

சிவமயம்.

சற்குரு சகாயம்.

நாலுமறையும் புகழ் மாலு மயனும் பணி
மேலுமரனுஞ் சொலும் வேலுமயிலுந் துணை.

ஸ்ரீ வடிவேலன் வளையல் விற்றல்

என்னும்

வள்ளிசுயம்வர

நாதனச் சிந்து.

(முதற்பாகம்)

இஃது

பொய்சொலான்குடி கிராம முனிசீப் மகா-ள-ள-ஸ்ரீ
சு. இராமகிருஷ்ண பிள்ளையவர்கள் விருப்பத்தின்பேரில்

மைசூரைச்சார்ந்த சந்திரபட்டினம் சங்கீத வித்வ சிங்கம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ வீரண்ணுவியாரவர்கள் மாணாக்கரிலொருவரும்

கும்பகோணம் அருட்கவி M. K. P. M.
மனோரஞ்சித நாயனர் அவர்கள் பிரதம மாணவரும்

திருவாரூரைச்சார்ந்த திருநெய்ப்பேர் ஜோதிஷ சாஸ்திர
வித்துவான் V. P. கந்தசாமிநாயனர் கனிஷ்ட குமாரருமாகிய

V. P. K. இராமையா நாயனரால்

இயற்றப்பெற்று

புலிவலம் வ. வீ. பக்கிரிசாமி மேஸ்திரியார்
அவர்களால் அச்சிடப்பெற்றது

விஜயபுரம்
...நிதி (பில்டிங்ஸ்) பிரஸில்,
...பதிப்பிக்கப்பெற்றது.

1933
026:45
N33.1
17294

உ

சிவமயம்.

ஸ்ரீ வடிவேலன் வளையல் விற்றல் என்னும்
வள்ளிசுயம்வர
நூதனச் சிந்து.

11291

முதற்பாகம்

(காப்பு வெண்பா.)

சீர்மேவு ஞானச் சிங்காரவேல் குகனார்
பார்மேல் வளையல் விற்ற பான்மைதனை—பேர்மேவும்
சிந்துதமி ழோதச் செல்வக் கணபதியே
வந்தெனக்கு தந்திடுநல் வரம்.

நவீனநூதன வர்ண மெட்டு.

(இராகம் இந்துஸ்தான்தோடி ஏகதாளம்)

ப ல் ல வி.

சுப்ரமண்யர்:— வளையலோ வளையலிங்ஙனம்
வாங்குவா ருண்டோ யாரும் (வளை)

அனுபல்லவி.

இதை— வாங்கப் பெற்றவர் தீங்கற்றிடுவர்
ஓங்குநற்புகழ் பாங்குற் றிடுவர் (வளை)

ச ர ண ம்.

இது— பழையநாள் தினுசுகளல்ல பண்புறும்புது வளையல்—இதை
பார்க்கவோ கண்கள்கூசிடும் பளபளப்புள்ள வளையல்—இதின்
விலையதோ சரசந்தான் மிக்க விசித்திரமுள்ள வளையல்—மெத்த
வேலைத்திறமை யானதிசைந்த வாலைப்பருவ மாதர்க்குகந்த (வளை)

ஒளிர்— கதிரவன்போல் சொலித்திடும் கனகரெத்தின வளையல்—தங்க
கங்கணம் பெண்கள் மனது கவரச்செய்திடும் வளையல்—ஒன்றும்
எதிரிலா திலங்குமற்புத எழில்மரகத வளையல்—இனி
எங்கினுமிதைப் போல்கிடைப்பது உங்களுக்கொருநாளுமரிது (வ)

இந்த— பூமிமேல் காணக்கிட்டிடா புதுமைச்சித்திர வளையல்—இப்போ
புதினமாய் ஏற்படுத்தின புஷபராகப்பொன் வளையல்—கந்த
சாமியால் செய்துமுடித்த தகுந்த லெட்சண வளையல்—இது
தானரிவையர் தங்கள் செங்கரம் பூணமிகவு மிங்கி தந்தரும் (வ)

மகா— முனிவரால் தெரிந்துசெப்பிய முறைப்படி செய்தவளையல்-மணம்
முடிந்திடா பெண்களை மணம் முடித்து வைத்திடும்வளையல்-வாங்கும்
வனிதையை புனிதையாக்கிடும் மகிமை தங்கிய வளையல்-இதை
வாங்கிடமகிழ் வாகவந்திடும் ஒங்கிடுஞ்சுக போகந்தந்திடும் (வ)

ஒரு— பழுதிலா மாணிக்கமுயர் பச்சைவயிர வளையல்—நீலம் [ஜெகம்
பசியகோமே தகம்வைடூர்யம் பதித்திழைத்தபொன் வளையல்-
முழுதுமே விலைமதித்திடும் முத்துப்பதித்த வளையல்—வந்து
மூண்டதிவ்வொரு நாளன்றியிது மீண்டுமிங்குற காண்பதரிது (வ)

வள்ளி

அங்கே- ஆரையா வளையல் விற்றிடும் அதிசயச்செட்டி யாரே—இந்த
அடவியில் வளையலும் விலை யாகுமோ சொல்லு வீரே—எந்த
ஊரையா நீரிருப்பது உற்ற தென்னஉம் பேரே—எந்த
ஊரிலிருந்தெங் கேகுறீர் நில்லும் வாரும்வளையல் விலையென்ன
[சொல்லும் (ஆரை)

சுப்பிரமணியர்

கேளாய்- தெரிவையே எனக்கோ சண்முகம் செட்டியாரென்னும் பேரு-உயர்
திருக்கழுகு மாமலையென்றே செப்புவதெந்தன் ஊரு—நாளும்
பரிவுடன் வளையல்விற்பதே—என்னை
பயின்ற அன்னைபேர் பகவதியம்பாள்
பகருந்தந்தைபேர் பசுபதி யென்பார் (தெ)

எந்தன்— அண்ணன்பேர் கணபதி செட்டியா ரவர்பெரும் ஞானி—இந்த
அவனிமேல் புலவர்புகழும் அருந்தமிழபி மானி—உயர்
திண்ணனென் மாமன் தன்பெயர் செப்புங்கோதண்ட பாணி-பெரும்
சீமானவருஞ் செல்வமிகுந்திடும் பூமானுலகில் பொற்பிலுயர்ந்திடும்

இங்கே- வழியதே தெரியாமலிந்த வனத்தின் வழியே வந்தேன்—இங்கோர்
மனிதருங்காணு திறுலென் மனதிற்திகி லடைந்தேன் வண்டார்
குழலிநீ கூப்பிட்டவுடன் கொஞ்சம்பயந் தெளிந்தேன்-இளங்
கோதையேமதி மோச மாயிந்த பாதையில் வந்தே னேது
செய்குவேன் (வழி)

வள்ளி

ஐயா— ஒன்றுக்கும் நீ ரஞ்சவேண்டாமிங் கொருகுறைவும் வராது—நல்ல
உத்தமகுண முற்றகுறவர் ஒங்கிடும்பதி ஈது-நானே
என்றைக்குமிப் புனத்திற்காவல் இருக்குறேன் வள்ளிமாது
சொன்னேன்
இங்கெதற்குமே பயமில்லைதேறும் துங்கவளையல் விலையென்ன
கூறும் (ஒன்)

சுப்பிரமணியர்

மட— மங்கையே தங்கவளையல் மதிக்கத் தக்கது மானே—பச்சை
மரகதம் மாணிக்கம் நீலம் வயிரம் முத்துகள் தானே—வைத்த
துங்கமா வளையல்கள்விலை தொகையதிகஞ்செந் தேனே—பசுந்
தோகையே யின்னம் பலவிதமுண்டு வாகுசேர்வர்ண வளையலும்
நன்று (மட)

வ ள் ளி

ஐயா— நீதியா யுள்ளவிலையை நிகழ்த்து மெந்தன்முன் னாலே—இந்த
நேரமே நானதற்குற்ற நிதியளித்து பின்னாலே—மட
மாதுநான் விரும்பும் வளையல் வாங்கிக்கொள்வேன் மென்மேலே
அண்ணன்
மார்கள்வந்திடும் வேளையாச்சுது நீர்வந்தும்மிக நேரம்போச்சுது
சுப்பிரமணியர் (நீதி)

மிக்க— அழகிலே சிறந்தவற்புத அன்னமே நெறிமாறோம்—எங்கள்
அப்பன்னாளிலிருந்து வளையல் அவனியில் விற்றுவாரோம்—இன்னம்
பழகினால் தெரியுமுனக்கு பழுதொன்றுமே கூறோம்—இங்கே
பார்மரகத பச்சைவளையல் நேர்விலைதச லெட்சம் பொன்வியல்
(அழ)

உயர்- ஆணிப்பொன் மேனிசுந்தர அஞ்சுகமே செந்தேனே—இந்த
அருமையா முத்துவளையல் ஆறுலெட்சம் பொன்மானே—ஒளிர்
மாணிக்கம் ரெத்னவளையல் வகைக்கிரு லெட்சந்தானே—இதை
வாங்கியணிந்த உடனே புருஷன் ஈங்குனக்கு வந்திடுவான் சரசன்
வ ள் ளி (ஆணி)

சரிசரி வளையல் விற்கநீர் தகுந்தவரல்ல காணும்—இங்கே
சரசமாய் வார்த்தை செப்பிடில் சங்கட மிகத்தோணும்
சொன்னேன்
தெரிகுவீர் அடுக்கும் விலையை செப்புமல்ல தெங்கேனும்—நீர்
சென்றுவளையல் விற்றுபிழையும் நன்று மிகவும் நவின்ற விஷயம்
சுப்பிரமணியர் (சரி)

மன— வருத்தமேல் மாதேஉலகில் வர்த்தகர்க்கிது வழக்கம்—எங்கள்
வளையல்கள் விற்கச்சரச வார்த்தைசொல்வதே பழக்கம்—இது
பொருத்தமில் லாதென்னிடம் நீ புகலுவதென்ன முழக்கம்—புவி
பெண்களைவிட மங்கை நீ யென்ன பொங்கதிசயந் தங்கியமின்ன
வ ள் ளி (வரு)

எதுகாண் எகிறிதலைமேல் ஏறப்பார்க்குறீர் சீச்சீ-மெத்த
என்னிடம் படிக்கவேண்டாம் எதுகெட்டு போச்சு—சரி
போதுங்காண் எழுந்தப்பாலே போய்விடும்மறு பேச்சு—ஒன்றும்
பூவையென்னிடம் வேண்டியதில்லை போவுன் வளையல்
சுப்பிரமணியர் தேவையுமில்லை (எது)

போவென்று லிவ்விடம்விட்டு நான் போவேனோ சும்மா செட்டி
வழியில்
போனயென்னைக் கூப்பிட்டழைக்க புகன்றதாரடி குட்டி—இங்கு
மேவியா னிதுவரையிலும் மெனச்கெட்டதற்கு வட்டி—மன
விருப்பத்தோடொரு முத்தந் தந்திடில் திருப்தியாக நான்
செல்லுவேனடி (போ)

வள்ளி 1714

என்ன— வார்த்தை நீ சொல்லவந்தாயடா வளையல் சுமக்கும் செட்டி-நீயோர்
வர்த்தகன்தானு துத்தேரி மதியில்லாத மட்டி—யாரை
பார்த்து நீ இந்த வார்த்தை பகரவந்தாய் கிட்டி—உன்னை
பார்க்க கிழட்டு பயல் நீ பன்னடா மூர்க்க குணங்கள் மிகுந்த
சுப்பிரமணியர் [தென்னடா (வார்)

என்னை— ஏண்டி நீ கூப்பிட்டே சண்டை இழுக்குருயிது செறியா—சற்றும்
எண்ணிப்பார்க் காமலெந்தனை ஏசுகின்றதுஞ் சரியா—உன்னை
வேண்டியிங்கே வந்தவனை வெறுத்துபேசுதல் முறையா—சும்மா
வேணவளைய விடுறேன் பெண்மணி பூணவுன் கையை கொடுவா
விஷயம் கண்மணி (ஏ)

என்றுமே வள்ளிகைதன்னை எட்டிவேலவன் பிடிக்க—சினம்
எய்தவள் கையைத் திமிரி இவர்க்கன்னத்திலே யிடிக்க—மிக்க
நன்றுவா வென்று பிறகும் நாடிகரத்தை பிடிக்க—வள்ளி
நாயகிகையை மேவிதள்ளியே வாயில்வந்தது யாவுஞ்சொல்லியே ()
வையயலே வேலவன்வள்ளி மாது முன்னமே நின்று—மட
மானேநீ கொஞ்சந்தயவு வைத்துக்கேள் மொழியொன்று—அந்த
பையலாம் மன்மதன்பஞ்ச பாணத்தைவிடுத்தின்று கடும்
பாடுபடுத்துரு னன்னவனை நாடியடக்க நீ செய்யோர் துணை-என்று

பூவருந்திருவே என்ற மெட்டு.

பின்னுடியும் பல்லவி யெடுப்பு.

வள்ளி சீ-சீயப்பால் போடா என்ன சேதி சொன்னுயோடா நெஞ்சு
தீரமென்னவிக் காரியந்தனை யாரிடத்தினில் கூறவந்தனை
சீரழிந்திடுவாய் சொன்னேன் தெரிந்து சென்றிடுவாய்

சுப்ர தெரிந்துதான்மானே உன்னை தேடிவந்தேனே இங்கு
திருமணம்புரிந் திருவருமினி ஒருமனத்துடன் மருவிடனி
சித்தமுங் களிப்பாய் நல்ல உத்தர வளிப்பாய்

வள்ளி தூ-தூகிழப்பயலே என்ன சொன்னுய் துற்செயலே உள்ள
துஷ்டனேயப்பா லெட்டிநில்லடா மட்டியிவ்விடம்
விட்டுச்செல்லடா

துப்புக்கெட்டவனே நல்ல சொரணை யற்றவனே

சுப்ர கொடுமையாய்ப்பேசி வார்த்தை கொட்டாதே யோசி குறக்
குட்டி நீ என்னை திட்டினுலுன்னை கிட்டிதாலி நான் கட்டுவேன்
குணமுடன்கேட்டு என்னை புணர்வதே நீட்டு [சொன்னேன்

வள்ளி இங்கே மிரட்டாதேயடுத்து உன்னை விரட்டுவேனடித்து காம
வெறியாலிங்கு நீ மேவியே பல மரியாதையில்லா வார்த்தைபுகல
வேண்டாஞ் சென்றிடுவாய் நிற்கில் வேதனைப்படுவாய்

சுப்ர நீ-அடிக்கில் நற்பதவி யானே அடைவதற்குதவி யாகும்
ஆதலாலெந்த வேதனைவந்த போதிலுமென்ன் காதலைத்தந்த
அழகு ரெத்தினமே நன்று பழக இத்தினமே

வள்ளி நல்லது மூடா—ஒன்றும் நடக்காது போடா—அடா
நாதியற்றவன் னீதசெட்டியே சாதிகெட்ட பொல்லாத சுட்டியே
நடந்திடப்பாலே புனங் கடந்து இக்காலே

சுப்ர வாயில் வந்தபடி-என்னை வையலா காதடி-உந்தன் [முடன்
மாப்பிள்ளை வந்தே கூப்பிட்டேனிறு மாப்பிளைவிடுத் தேப்ரிய
வாடி வங்கணமே-போடு வளையல் கங்கணமே

வள்ளி மாப்பிள்ளை நீயா-அடா மதியில்லாப் பேயா-அண்ணன் [பொருடா
மார்கள் வருவார் வஞ்சத் திருடா வாயைக் கிழிப்பார் கொஞ்சம்
வரட்டும் புல்லுகிறேன்- உன்னை வதைக்கச் சொல்லுகிறேன்

சுப்ர என்னை-வதைக்க மண்மீது-யார்க்கும் வல்லமை யேது-உணர்
வாயிது நிச மாகுமப்படி மாயினும் விடேன் நீயு மெப்படி
வைதாலுஞ் சகிப்பேன்-உன்னை மணஞ்செய்தே சுகிப்பேன்

வள்ளி வெட்கங் கெட்டவனே-காம வெறி பிடித்தவனே-இங்கே
வீணுய்ப் பினத்த வேண்டாம் நீயொரு ஆணுய்ப் பிறந்த தேண்டா
வில்லங்கப் பாவி-போப்போ விலகி மூதேவி [மாபெரு

சுப்ர விலகு வேனேடி-உன்னை விட்டுப் பின்னடி-என்னை [செழிய
மெல்லி நீயணைந் தாலே யொழிய செல்வதில்லையோர் காலுஞ்
விற்பனத் தேனே சொன்னேன் விளங்கிக்கொள் மானே [அடா

வள்ளி விளங்கிக் கொண்டேனின்றே-நீயோர் மிருக ஜென்ம மென்றே-
விருதாப் பயலே சரிதான் போடா மரியாதையென் பதரியா மூடா
வீம்புள்ள மாடா-நீயும் ஆண்பிள்ளை யாடா
சரி-ஆண்பிள்ளைத் திறமை-இனி அறிந்துகொள் முறைமை-என்று

விஷயம் ஆடுஞ் சிகண்டி ஏறுங்குழகன் நாடியே வள்ளி நாயகியிடம்
அருகினி லடுத்தார்-கைச் சரசமுந் தொடுத்தார்

மதுரையம்பிகைமீனுள் என்ற மெட்டு.

பின்னடியும் பல்லவி எடுப்பு

வள்ளி சங்கையற்றநிர் மூடா-உன்னை சனியன்பிடித்ததோடா-என்ன
தடித்தனமா யடுத்துநீகைச்
சரசமென்னிடஞ் செய்யவந்தாய் சரசமென்னிடஞ் செய்யவந்தாய்
சரசமென்னிடஞ் செய்யவந்தாயடா
சண்டாளா வுன்கையை துண்டாக வெட்டுவேன்
ஜாக்ரதைமடப்பேயே-கெட்ட போக்கிரிப்பயல் நீயே

சுப்ர போக்கிரியல்லமானே உன்னை புணரவந்தவன்நானே-என்னை
போடாவென்றும் மூடாவென்றும்
புல்லுதலுனக்கு நல்லதல்ல புல்லுதலுனக்கு நல்லதல்ல
புல்லுதலுனக்கு நல்லதல்ல மிக புண்ணியந் தங்கிடும்
கண்ணியம் பொங்கிடும்
புகழ் பெறவாய்மென் மேலே-என்னை சுகமுடன்மணந் தாலே

வள்ளி கொண்டகணவன் போல மனங் கூசா தென்னிடஞ்சால-இங்கே
குதித்தும்மெத்த கதித்துப்பேசி

கொண்டாட்டம் போடாதே திண்டாடுவாய்
கொண்டாட்டம் போடாதே திண்டாடுவாய்
கொண்டாட்டம் போடாதே திண்டாடுவாயினி
கண்டறிவாய் மெத்த சண்டித்தனமுற்ற
கூருகெட்ட துன்மார்க்கா உன்னை யாருபெற்றாரோ மூர்க்கா

சுப்ர மூர்க்கனுனல்ல மயிலே உன்னை பார்க்கவந்தநற் செயலே வண்டு
மொய்க்குமலர் மைக்குழல்மா
மோகனசுந்தர கோகிலமே மோகனசுந்தர கோகிலமே
மோகனசுந்தர கோகிலமே யொளிர்
முத்துநகைநவ ரெத்தினமே எந்தன்
மோகந்தவிர்க்கவருவாய் சுக போகமெனக்கு தருவாய்

வள்ளி போகசுக முன்பாரி-யிடம் போய் நீ பெறுவாய் கோரி-இங்கு
பூவை யென்மே லாவல் கொண்டே [குள்ளாகாதே
பொல்லாத பாவத்துக் குள்ளாகாதே பொல்லாத பாவத்துக்
பொல்லாத பாவத்துக் குள்ளாகிடா தேடா
வல்லாண்மை பேசிமுன் நில்லாதே செல்லடா
புகன்றேன் கேட்டித் ததியே-நீ அகன்றால் நல்ல மதியே

சுப்ர நல்லமதியால் தானே-உன்னை நான்வந்து கண்டேன்மானே-என்னை
நடந்திடென்றால் மடந்தையே கேள் [னகலேன்
நானுன்னை விட்டுமேதா னகலேன் நானுன்னை விட்டுமேதா
நானுன்னை விட்டுமேதா னகலேன் சொந்த
நாயகியாயுன்னை நேயமுடன் கொள்ள
நாடியே வந்தேன் மாதே-கன மோடி நீ செய்திடாதே [னேன்

வள்ளி அதற்கெவளையும் வேறு நீ அடுத்தெங்கேயேனும் பாரு சொன்
அறிந்திடுயான் அதற்கிசையேன் [டாம்
ஆடவனே என்னை நாடவேண்டாம் ஆடவனே என்னை நாடவேண்
ஆடவனே என்னை நாடவேண்டாமடா
ஆண்மையுடனேவா தாட வேண்டாமடா
அடுக்கா மொழிகள் கூறி யிங்கு சடுத்தம் பண்ணாதே மீறி

சுப்ர எனக்குன்னையன்றி பொருத்தம் இல்லை
எவள்மீதும் மனத்திருத்தம் இங்கு
ஏந்திழைநீ பாந்தமுடன்
என்னைமணந்திடு நன்னயமாய் என்னைமணந்திடு நன்னயமாய்
என்னைமணந்திடு நன்னயமா யென்றும்
உன்னையான் கைவிடே னன்னமே நீ யொன்றும்
இனிதடைபுகலாதே-மனங் கனிவுடன் வாராய்மாதே

வள்ளி இத்தனை யுனக்கெடுத்து புத்தி இயம்பியுமின்னுமடுத்து நீயும்
எட்டிடாமல் கிட்டி வந்தே
ஏடாகூடம் பேச நாடுகின்றாய் ஏடாகூடம் பேச நாடுகின்றாய்
ஏடாகூடம் பேச நாடுகின்றாய் குடி
கேடா தமயன்மா ரோடி வரும்படி
இந்த நேரமே கூவி நானும் இங்கழைக்குறேன் மேவி

17|12|91.
O78:417
N53

விஷயம் வள்ளி இவ்விதம் புகன்றே அண்ணன்
மாரைக் கூப்பிட முயன்றே நின்று
வாயெடுக்கச் சேயிழைமுன்
வந்துடனே மிகத் தந்திரமாய் வந்துடனே மிகத் தந்திரமாய்
வந்துடனே மிகத் தந்திரமாய் நய
வாக்கியங்கள் வள்ளி கேட்கும்படி சொல்லி
வடிவேலனிற்குங் காலே வேடர் வனந்தனில் மென் மேலே
வேட்டையாடிடுஞ்சத்தம் காதில் கேட்டறுமுகன் சித்தம்–மிக
வேசலித்தே யோசித்துப் பின்
மெத்தவுமே துணிவுற்ற குகன் மெத்தவுமே துணிவுற்ற குகன்
மெத்தவுமே துணிவுற்ற குகனந்த
வேடுவராலேயே நாடி நாமிங்குற
வேண்டுமென்னவே உறுதி செய்து மீண்டும் வள்ளிமுன் கருதி
வனிதைநீயெனக் கிணங்கி என்னை மணந்திடாயோடி வணங்கி துன்
மார்க்கியோர் கை பார்க்கிறேனுன்
வல்லவனானல் பின் சொல்லுகிறேன்
வல்லவனானல் பின் சொல்லுகிறேன்
வல்லவனானல் பின் சொல்லுகிறேனென்று
வன்னத் தினைப்புனந் தன்னைக் கடந்துமே
மாமயிலவன் சென்றார் சபாஷ் ராமையன் தமிழென்றார்

ஸ்ரீ குகன் திருவடிகளே சரணம் சுபமஸ்து!

இதன் 2-ம் பாகம் கூடிய சீக்கிரம் வெளிவரும்.

அருட்கவி
M. K. P. M. மனோரஞ்சித நாயனார் எழுதிய
ஆசீர்வாதம்.

பொன்னுலகை யாளுஞ்சிவ சண்முகக் கடவுளருள் பொழிய வேண்டி
சென்னியினால் தொழுதேற்ற சிவனடியார் மனங்களிக்க ஜெகத்தின் மீதில்
உன்னிதநற் பாமாலை உகந்தெழுதும் ராமைய நாயனென்போன்
இன்னிலத்திலுயர்வான செல்வம்பெற்றென்நாளும் வாழ்வதென்றியம்புமாலிதா
புண்ணியம் ! புண்ணியம் !! புண்ணியம் !!!

விஜயபுரம் வித்துவான் வே. நா. சபாபதி தாசர் இயற்றிய
சாற்றுக்கவி

செல்வம் கொழிக்கும் திருநெய்ப் பேர் ராமையா
சொல்வன்மையாய் வேலன் சுயம் வரத்தைப்—பல்கல்
வையம்புகழ் வளையல் அற்புதச் சிந்தை யிசைத்தான்
ஐயன் திருவருளை ஆசி.

கருணாநிதி (பில்டிங்ஸ்) பிரஸ்-விஜயபுரம் 33 vdm